**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 223/2010 P.W. 3/L.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. அருள் ஜோதி | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1, 3 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 2, 4, 5 வது குற்றம் சுமத்தப்பட்ட நப்ரகள் ஆஜ்ர. குற்றம் சுமத்தப்பட்ட நபர் கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கடல் தொழில் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். அ.சா1 ஐ எனக்குத் தெரி யும். 01.03.210 ம் தேதி மாலை 05.30 மணி அளவில் நான் கோடிமுனை பஸ் ஸ்டாண்ட் அருகே வந்தபோது மதன் என்பவர் அ.சா1ன் இடது கையை திருக்கி கைகளால் அடித்தார். அதில் அ.சா1ன் விரல் ஒன்று முறிந்துவிட்டது. அதன் பிறகு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அனைவரும் சேர்ந்து கையாலும், காலாலும்தாக்கினார்கள்.

2. மேலும் அ.சா1 ஐப் பார்த்து தகாத வார்த்தையால் பேசினார்கள். மேலும் அவரை கடலில் கொண்டு போட்டுவிடுவோம் என்று மிரட்டினார்கள். அதன் பிறகு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். அ.சா1 ஐ சிகிட்சைக்காக ஆட்டோவில் நானும் ராஜ் என்பவரும் அழைத்துச்சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார் கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

குறுக்கு விசாரணை செய்ய வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL</u>**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 223/2010 P.W. 4/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராஜ் என்ற அந்தோணி ராஜ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. ராஜ்குமார் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.11.2024.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u> :**

**<u>1, 3 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 2, 4, 5 வது குற்றம் சுமத்தப்பட்ட நப்ரகள் ஆஜ்ர. குற்றம் சுமத்தப்பட்ட நபர் கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கடல் தொழில் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். அ.சா1 ஐ என்னுடைய தந்தை. 01.03.2010 ம் தேதி மாலை 04.30 மணி அளவில் சைமன் காலணி பஸ் ஸ்டாண்ட் அருகே எனது தந்தைச் சென்ற போது எனது தந்தையை மதன் என்பவர் சட்டையைப் பிடித்து கையால் அடித்து அவரது கையை திருக்கினார். மேலும், தகாத வார்த்தையால் பேசினார். அதன் பிறகு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அனைவரும் சேர்ந்து கடலில் எனது தந்தையை இழுத்துச் சென்று தாழ்த்திவிடுவோம் என்று மிரட்டினார்கள்.

2. அதன் பிறகு ஆட்கள் வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். எனது தந்தையை நாங்கள் ஆட்டோவில் ஏற்றி ஜேம்ஸ் மருத்துவமனையில் கொண்டு சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

குறுக்கு விசாரணை செய்ய வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.